International Research Journal of Tamil Literary Studies

# New Rules and Tholkaappiya Rules in Nannul Grammar

# நன்னூலில் காணப்படும் தொல்காப்பிய அடியொற்றிய புணர்ச்சி விதிகளும் புதிய விதிகளும்

**மனோன்மணி தேவி** [அ, *]

[அ] *தமிழ்த்துறை, சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**Manonmani Devi** [a, *]

[a] **Department of Tamil, University Pendidikan Sultan Idris, Perak, Malaysia.**

[*] **Corresponding Author:** manonmanidevi@fbk.upsi.edu.my

**Received: 06-07-2020, Accepted: 28-07-2021**

DOI: https://doi.org/10.34256/vp2132

***Abstract:*** Next to the canonical Tholkaappiyam, the book entitled 'Nannool' stands out as the one that closely follows the Tamil grammatical tradition. This book can be considered as a sequel to the 'Tholkaappiyam' with respect to the rudimentary Tamil grammar rules used, though some of which have been omitted over the years, with some improvisations added. 'Nannool' has fine-tuned some aspects which Tholkaappiyam had eleborated in detail to an easier & simplified version of understanding and at the same time consolidated the grammar knowledge within it. The 'word punarchi' rules found in 'Nannool' along with the new added-on 'word punarchi' rules not mentioned in Tholkaappiyam are looked at closely and reviewed in detail in this study. This is the primary aim of this study.

***Keywords:*** *Tholkaappiyam, Nannool, Grammar, Punarchi rules, New rules*

***ஆய்வுச்சாரம்:*** *தொல்காப்பியத்திற்குப் பிறகு தமிழ் இலக்கண மரபுக்கு உட்பட்டு இலக்கணம் வகுத்த சிறப்பிற்குரியது நன்னூல் ஆகும். தொல்காப்பியத்தின் வழிநூலான இந்நூல், தொல்காப்பியத்தின் அடியொற்றியே விதிகூறினும், அவற்றில் தன் காலத்தில் வழக்கிறந்தன சிலவற்றை விலக்கியதோடு புதிய வடிவங்களுக்கும் இடங்கொடுத்து, தொல்காப்பியம் விரிவாகக் கூறும் சில செய்திகளைச் சுருங்கக் கூறி, இலக்கணக்கல்வியை நெறிப்படுத்தியுள்ளது. நன்னூலில் காணப்படும் சொற்புணர்ச்சி விதிகளில், தொல்காப்பியத்தில் கூறப்படாத புதிய விதிகளையும் தொல்காப்பிய அடியொற்றி வகுக்கப்பட்ட புணர்ச்சி விதிகளையும் நுண்ணிய முறையில் ஆராய்ந்து கண்டறிவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.*

***கருச்சொற்கள்:*** *தொல்காப்பியம், நன்னூல், இலக்கணம், புணர்ச்சி விதிகள், புதிய விதிகள்.*

## *முன்னுரை*

ஒரு மொழியின் இலக்கணங்கள் ஒன்றையொன்று சார்ந்தும் ஒன்றுக்கு மற்றொன்று மாதிரியாகவும் இருத்தல் இயல்பு. இவ்வியல்பையே முந்துநூல் - வழிநூல் உறவுநிலை என்பர் தமிழ் இலக்கணவியலார். தமிழ்ச்சொற்புணர்ச்சி விதிகளைக்கூறும் முந்து நூலாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய இலக்கணநூல்கள் அனைத்துமே புணரியல் இலக்கணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளமை அறியப்படுகின்றது. மொழி என்பது காலந்தோறும் மாறக்கூடியது என்றாலும் தமிழின் சிறப்பியல்பாகக் கருதப்படும் புணரியல் இலக்கணத்தைப் பொறுத்த வரை மூலநூலான தொல்காப்பியத்தை அடியொற்றி எழுதப்பட்டதாகக் கூறப்படும் நன்னூல் எனும் இலக்கண நூலில் புதிய புணரியல் விதிகள் உண்டா? எந்தெந்த விதிகள் தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்துள்ளன என்ற தகவல்களை நுண்ணியமுறையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## *ஆய்வு அணுகுமுறை*

நன்னூல், தொல்காப்பியத்தின் வழிநின்று சொற்புணர்ச்சி விதிகளை விதந்துரைக்கின்றனவா என்பதை ஆராய்வதற்கு ஒப்பீட்டு அணுகுமுறையும் (Comparative) புணரியல் விதிகளை வகைப்படுத்திப் பகுத்துக் காணும் பகுப்பாய்வு அணுகுமுறையினையும் (Analytical) அவற்றை விளக்கியுரைக்கும் விளக்கமுறை அணுகுமுறையினையும் (Descriptive) கள ஆய்வு அணுகுமுறையினையும் (Field Research) உட்கொண்டதாக இவ்வாய்வு அமைகிறது.

## *நன்னூலில் புதிய புணர்ச்சி விதிகள்*

உயிரீற்றுப்புணர்ச்சி

எகர வினா

‘எகர வினாமுச் சுட்டின் முன்னர்

உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்

பிறவரின் அவையும்,... ; (நன். 163)

எகர வினாவின் முன்னும், அ,இ,உ என்ற சுட்டின் முன்னும், உயிர் எழுத்தும் யகர மெய்யும் வரின் வகர மெய் தோன்றும்; யகர மெய் நீங்கிய பிற மெய்கள் வரின், வந்த மெய்மிகும்; என்பது நன்னூலார் கருத்தாகும். தொல்காப்பியம் ‘யா’ என்ற வினா எழுத்தைக் குறித்தது(**த.உ.தொல்.**224). வழக்கில் ‘யா’ என்பது ‘எ’ எனத்திரிந்த காரணத்தினால் நன்னூலார் எகரத்தை வினா எழுத்து என்று சுட்டியுள்ளமை புதிய செய்தியாகும். காட்டு:

யாது - எது

யாவர் - எவர்

மேலும், எகர வினாவையும், தொல்காப்பியர் சுட்டிய, அ, இ, உ என்ற மூன்று சுட்டெழுத்துகளையும் குறிப்பிட்டு, இவற்றின் முன் உயிரும் யகரமும் வரின், வகர உடம்படுமெய் தோன்றும் என்று நன்னூலார் சூத்திரம் அமைத்துள்ளார். காட்டு:

எ+ அணி = எவ்வணி அ+உயிர் =அவ்வுயிர் அ+யாடு=அவ்யாடு

எ+யானை = எவ்யானை இ+உயிர்=இவ்வுயிர்

இ,ஈ,ஐ வரின் யகரம் உடம்படுமெய்யாக வரும் பிற வரின் வகர மெய் தோன்றும் என்று இளம்பூரணர் கூற, நன்னூலார், நூற்பாவில்(நன்.162) இக்கருத்தையே கூறியதுடன் ஏகாரம் வரின் யகரம் வகரம் இரண்டும் உடம்படுமெய்களாக வரும் என்கின்றார். இருப்பினும், இந்நூற்பாவில், இகரச்சுட்டு வரின் வகரமெய் தோன்றும் என்ற தொல்காப்பியவிதியைக்(**த.உ.தொல்.**207,தொல்.238) கூறியமை நன்னூலாரின் முன்கூறிய கருத்துக்கு முரண்பட்டுள்ளது என்பது கருதத்தக்கது.

### *அளவுப்பெயர்- உரி*

‘உரிவரின் நாழியின் ஈற்றுஉயிர் மெய்கெட,

மருவும் ‘ட’ கரம்: உரியின் வழியே

யகரஉயிர் மெய்யாம் ஏற்பன வரினே’ (நன்.174)

உரி எனும் அளவுப்பெயர் முன் நாழி எனும் அளவுப்பெயர் வரின், ஏற்படும் மாற்றத்தைத் தொல்காப்பியத்தை(**த.உ.தொல்.**240) அடியொற்றி நன்னூல் கூறியுள்ளது. உரி எனும் சொல், பிறபொருட்பெயரோடு புணரின் வல்லெழுத்து மிக்கு முடியும் என்று இளம்பூரணர் உரையில் கூறப்பட்டுள்ளது. காட்டு: உரி+காயம் = உரிக்காயம்

இருப்பினும் உரி நிலைமொழியாய் நிற்க, அதன்பின்னால் ஏற்ற சொல் வரின் யகர உயிர்மெய் வரும் என்ற நன்னூலார் கருத்துப் புதிய செய்தியாகும். காட்டு:

உரி+பயறு=உரியபயறு

இப்புதிய செய்தி, தொல்காப்பியத்தில் காணப்படவில்லை.

நொ,து முன் ஞ,ந,ம,ய,வ

‘குறில்வழி யத்தனி ஐந்நொது முன்மெலி

மிகலுமாம் ...’ (நன்.158)

குறில்முன் நின்ற யகரம், ஓரெழுத்து ஒருமொழியான ஐ,நொ,து ஆகியவற்றிற்கு முன் வருகிற, மெல்லினங்கள்-ஞகார நகார மகாரங்கள் மிகலும் இயல்பாதலன்றி மிக்கு முடிதலும் ஆகும் என்பது நன்னூலார் கருத்து. ‘மிகலுமாம்’ என்ற எச்சவும்மையால் அவ்வெழுத்துக்களின் முன் இடையெழுத்து மிகலுமாம் என்றதாயிற்று என்றும் உரையாசிரியர்கள் விளக்கம் கூறியுள்ளனர். நிலைமொழியீற்றில் மெல்லினமும் இடையினமும் உயிர் எழுத்துகள் 12உம் வந்து, ஞ,ந,ம எனும் மெல்லின எழுத்துகள் வருமொழியில் வரின் அல்வழி வேற்றுமை இருவழியிலும் இயல்பாயும் மிக்கும் முடியும் என்ற விதியைத் தொல்காப்பியர் கூறியுள்ளார்(**த.உ.தொல்.**145). இவ்விதியில் ஐயும் யகரமெய்யும் அடங்கும். ஆயினும், நொ,து எனும் ஓரெழுத்து ஒருமொழிக்கு முன் மெல்லினம் வரின் இயல்பாதலன்றி மிகுந்தும் புணரும் என்பது நன்னூல் கூறும் புதியவிதியாகும். தொல்காப்பியர் கருத்துப்படி நெடில் எழுத்துகளே ஓரெழுத்து ஒருமொழியாக வரும்(**த.உ.தொல்.**43). குற்றெழுத்துகள் ஐந்தும் மொழிநிறைவு பெற வருவதில்லை(த.உ.தொல். 44). எனவே, தொல்காப்பியர் இவ்வெழுத்துகளுக்குத் தனிவிதி கூறினாரில்லை. இருப்பினும், இளம்பூரணர் தம் உரையில், ‘குற்றெழுத்துகள் ஓரெழுத்தொருமொழி ஆகாவென்பதும், அவற்றுள் ஒரு மொழியாவன உளவென்பதும் உணர்த்துதல் நுதலிற்று’ என்று கூறி, து,நொ எனும் எழுத்துகளைக் காட்டுகளாகக் கூறியுள்ளார் என்பது கருதத்தக்கது. காட்டு:

ஐ+நூறு > ஐந்நூறு

ஐ+ஞாலம் > ஐஞ்ஞாலம்

மெய்+ஞான்றது > மெய்ஞ்ஞான்றது

நொ+ஞெள்ளா > நொஞ்ஞெள்ளா  து+ஞெள்ளா > துஞ்ஞெள்ளா

நொ+நாகா > நொந்நாகா  து+நாகா > துந்நாகா

நொ+மாடா > நெம்மாடா  து+மாடா > தும்மாடா

நொ+யவனா >நொய்யவனா  நொ+வளவா>நொவ்வளவா

நொ,து எனும் ஓரெழுத்து ஒருமொழிகள் இன்று வழக்கில் இல்லை. நொ எனும் அடிச்சொல் நொந்துபோதல், நோதல், நொந்தான் எனவும் து அடிச்சொல் துப்பார்க்கு(உண்பார்க்கு), துய்ப்பு, துய்த்தல் எனவும் சொற்கள் உருவாகி அவையே வழக்கிலுள்ளன என்பது கருதத்தக்கது.

**குற்றுகர ஈற்று மரப்பெயர்**

‘தெங்குநீண்டு ஈற்றுயிர் மெய்கெடும் காய்வரின்’  (நன். 187)

காய் என்ற சொல் வருமொழியாக வரின், தெங்கு என்ற நிலைமொழி முதல் எழுத்தான தெ என்பது தே என நீண்டு இறுதியில் உள்ள கு என்ற உயிர்மெய் நீங்கும் என்பது நன்னூலார் கருத்து. ஆனால், குற்றியலுகர இறுதி மரப்பெயர்கள் புணர்ச்சியில் அம் சாரியை பெறும் என்று தொல்காப்பியம் விதி வகுத்தது(**த.உ.தொல்.**415). தெங்கு எனும் சொல்லும் அவ்வாறு புணரும் இயல்பினது. ஆனால், நன்னூலார் தெங்கு+காய் > தேங்காய் என்றாகும் என புதிய விதி கூறியுள்ளார். இதற்குக் காரணம், நன்னூலார் காலத்தில் தெங்கங்காய் என்பது மருவித் தேங்காய் என வழங்கியதே ஆகும்.

மெய்யீற்றுப்புணர்ச்சி

பரண், கவண்

‘சாதி குழூஉப்பரண் கவண்பெயர் இறுதி

இயல்பாம் வேற்றுமைக்கு;...  (நன். 211)

சாதி பற்றி வரும் பெயர்களுக்கும், கூட்டம் பற்றி வரும் பெயர்களுக்கும், பரண், கவண் என்ற பெயர்களுக்கும் ஈற்றில் உள்ள ணகரமானது வேற்றுமையில் வல்லினம் வந்தால் இயல்பாகும் என்பது நன்னூலார் கருத்து. காட்டு:

பரண் + கால் > பரண் கால்

கவண் + கொம்பு > கவண் கொம்பு

தொல்காப்பியர், ணகர ஈற்றுச்சொற்கள், அல்வழியில் இயல்பாகப் புணரும்(**த.உ.தொல்.**147) என்றும் வல்லினம் அல்லாத பிறமெய்கள் வந்தால் வேற்றுமையில் இயல்பாகப் புணரும் என்கின்றார்(**த.உ.தொல்.**148). எனவே, நன்னூலாரின் இவ்விதி புதிய விதியாகும்.

எகின் (பறவைப்பெயர்)

‘மரம்அல் எகின்மொழி இயல்பும் அகரம்

மருவ வலிமெலி மிகலும் ஆகும்’  (நன். 215)

வாகை பதிப்பகம்

*மரமல்லாத எகின் பறவைச்சொல் வல்லினம் எதிரே வரின், வேற்றுமைத் தொடரில் இறுதி இயல்பாகும். வேற்றுமை அல்வழித்தொடர் இருவழியும் அகரச் சாரியையைப் பொருந்த, வருமொழி முதலிலுள்ள வல்லினமாவது அதற்கு இனமாவது மிகும் என்பது நன்னூலார் விதி.*

*காட்டு: எகின் + கால் > எகின் கால்/எகினக்கால்/எகினங்கால்*

*எகின் + வாழ்க்கை > எகினவாழ்க்கை*

*இவ்விதி முற்றிலும் தொல்காப்பிய(த.உ.தொல்.337) அடியொற்றிய நன்னூல் விதியாகும். இருப்பினும் எகின் எனும் பறவைப்பெயர் வல்லினம் வரின், வேற்றுமைத்தொடரில் இயல்பாகும் எனும் நன்னூல் கூறும் செய்தி மட்டும் புதிய செய்தியாகும்.*

### ***சாரியைப் புணர்ச்சி***

*நன்னூலார் உருபு புணரியல் என்ற இயலில் சாரியை குறித்துப் பேசுகிறார்.*

*'பதமுன் விகுதியும் பதமும் உருபும்*

*புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை*

*வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்'* (நன். 243)

*என்பார். அதாவது, சாரியைகள் என்பன சார்ந்து இணைப்பதற்கு வருவன. அவை பெயரையும் உருபையும் இணைப்பன. பதம் முன் விகுதி முதலாய உறுப்புகளை ஒட்ட வருவன விகுதிப்புணர்ச்சியுட் சாரியைகள். பதம் முன் பதத்தை ஒட்ட வருவன பதப்புணர்ச்சியுட் சாரியைகள். பதம் முன் உருபை ஒட்ட வருவன உருபு புணர்ச்சியுட் சாரியைகள் என்று பதங்கள் இணையும் போது மூன்று நிலைகள் உருவாதல் குறித்துப் பேசுகிறார். காட்டு:*

### ***விகுதிப்புணர்ச்சி:***

*நடந்தனன் > நட + த் (ந்) + த் + அன் + அன் = இறுதிக்கு முந்திய 'அன்' சாரியையாகும்.*

*நடந்தான் > நட + த்(ந்)+த்+ஆன். = இதில் சாரியை இல்லை.*

### ***பதப்புணர்ச்சி:***

*புளியங்காய் > புளி + அம் + காய் = அம் சாரியை தோன்றியுள்ளது.*

*புளிக்கறி > புளி + கறி = சாரியை இல்லை.*

### ***உருபு புணர்ச்சி:***

*மரத்தை > மரம் + அத்து + ஐ = அற்றுச் சாரியை தோன்றியுள்ளது.*

*பாலை > பால்+ ஐ = சாரியை இல்லை.*

*இந்த மூன்று நிலைகள் குறித்துப்பேசும் நன்னூலார், சாரியை வருதலும் வாராமையும் உண்டு என்று கூறுவது தெளிவு.*

*தொல்காப்பியர் விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி என்று அமைத்துக்கொள்ளவில்லை. பதம், பதவியல் என்ற கருத்து நன்னூலார் காலத்தில் உருவானவை. தொல்காப்பியர் சொல், சொல்லின் உறுப்பு என்ற முறையில் கூறிச்செல்கிறார்.*

*தொல்காப்பியர் சாரியைகள் குறித்துப் புணரியலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். சாரியைகள் ஒன்பது என்றதோடு இன்னும் பிறவும் என்றதோடு தம், நும், நம், உ, அ, ஏ, ஐ, உம், கெழு ஆகியனவற்றையும் ஆங்காங்குச் சுட்டிச்செல்லுகின்றார். இதன் பொருட்டு இவையும் சாரியைகள் என்பர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். சாரியைகளின் மரபை நன்குணர்ந்த நன்னூலார் உருபு புணரியல் எனும் இயலில், சாரியைகளைக் குறிப்பிடுகையில்,*

*'அன்ஆன் இன்அல் அற்றுஇற்று அத்துஅம்*

*தம்நம் நும்ஏ அஉஐ குன*

*இன்ன பிறவும் பொதுச் சாரியையே'* (நன். 244)

*என்கிறார். தொல்காப்பியர் குறிப்பிட்ட ஒன் சாரியை வழக்கின்மை கருதி நன்னூலார் விலக்கினார். மேலும், தொல்காப்பியர் ஆங்காங்குச் சுட்டிச்சென்றுள்ள அ, உ, ஐ போன்ற சாரியைகளை, நன்னூலார் சாரியைப் பட்டியலில் சேர்த்து, நூற்பாவாக அமைத்துக்காட்டியுள்ளார். காட்டு:*

*பலா + கோடு > பலா + அ+ கோடு > பலாஅக்கோடு*

*உரிஞ் + கடிது > உரிஞ் + உ+ கடிது > உரிஞுக்கடிது*

*இல் + பொருள் > இல் + ஐ+ பொருள் > இல்லைப்பொருள்*

*மேலும், நன்னூலார் கூறிய கு, அற்று, இற்று, னகரச் சாரியைகள் தொல்காப்பிய அடியொற்றியவை என்பது கீழே நிறுவப்பட்டுள்ளன. அல் எனும் சாரியை மட்டுமே நன்னூலார் புதிய வழக்கினவாகக் கூறும் சாரியையாகும்.*

## ***தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் புணர்ச்சி விதிகள்***

### ***சாரியைப் புணர்ச்சி***

#### ***அகரச்சாரியை***

*தொல்காப்பியர், அக்கு எனும் சாரியையைக் குறிப்பிட்டு, புணர்ச்சியில் அதன் இறுதி கெட்டு, வன்மைக்கேற்பத் திரியும் என்கிறார். இதனால் புணர்ச்சியில் அக்குச் சாரியை அகரமாகவே நிற்கும்(**த.உ.தொல்.**128).*

*தாழுடன் கோலும், தமிழ் எனும் சொல்லுடன் பிறவும் புணர்கையில் அக்குச்சாரியை பெறும் எனத் தொல்காப்பியர் கூறுகிறார்(தொல்384, 385). நன்னூலார், வேறுபட்டு அகரச்சாரியை பெறும் என்கிறார்(நன்.225).*

*தமிழ்அவ் உறவும் பெறும் வேற்றுமைக்கே;*

*தாழும் கோல்வந்து உறுமேல் அற்றே* (நன். 225)

***காட்டு:***

*தமிழ் + சாதி > தமிழ் + அ + சாதி > தமிழச்சாதி*

*தாழ் + கோல் > தாழ் + அ + கோல் > தாழக்கோல்*

*புணர்ச்சியில் அக்குச் சாரியை அகரமாகவே நிற்கும் என்று தொல்காப்பியர் கூறியதை ஏற்றுக்கொண்டு, நன்னூலார் அகரச்சாரியை பெறும் என்கிறார். அக்குச்சாரியையின் புணரியல்பு கருதியே அதனை அகரச்சாரியை என நன்னூலார் கொண்டார் என்பது தெளிவு. எனவே, இம்முடிவில் இருவருக்கும் சிறு கருத்து வேறுபாடு மட்டுமே காணப்படுகிறது. எனவே, இது தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் விதி என்பது தெளிவு.*

***குகரச்சாரியை***

*இகர, ஐகார இறுதி முன் இக்குச்சாரியை வந்து இயலும். ஆனால் புணர்ச்சியில் இக்கின் இகரம் நிலைமொழி இகரத்துடன் நின்று புணர்வதில்லை. இதனைத் தொல்காப்பியம்,*

***'இக்கின் இகரம் இகரமுனை அற்றே'*** *என்கிறது(த.உ.தொல்.*126). *நன்னூலார், இக்கு என்பதன் எஞ்சிய வடிவமான 'கு' வை மட்டும் சாரியையாகக் கொண்டார்.*

***அற்றுச்சாரியை***

*தொல்காப்பியர், பலவின் பாலுணர்த்தும் அவ், இவ், உவ் என்பவற்றுடனும் யா எனும் வினாவுடனும் சில, பல எனும் தொடரல் இறுதிச் சொற்களுடனும் வற்றுச் சாரியை தோன்றுவதைக் குறிப்பிடுகின்றார்(**த.உ.தொல்.*** 174, 175, 177, 183). *மேலும், புணர்ச்சியில் வற்று சாரியை அற்று சாரியை ஆகும் நிலையைக் கூறுகிறார்(**த.உ.தொல்.***122). *தொல்காப்பியரின் இக்கருத்தை அடியொற்றிய நன்னூலார், தொல்காப்பியர் கூறும் திரிந்த வடிவத்தையே முதன்மை வடிவமாக விதி செய்து அற்று எனும் சாரியை வடிவத்தைத் தேர்ந்தார். காட்டு:*

*அவ்+அற்று+ஐ>அவற்றை*

*யா+அற்று+ஐ > யாவற்றை*

*இந்நிலையில் வரும் வகரத்தை உடம்படுமெய்யாகக் கொள்ளல் வேண்டும்.*

***இற்றுச்சாரியை, னகரச்சாரியை***

*இன் சாரியை புணர்ச்சியில் இற்றாகவும் திரியும்(**த.உ.தொல்.***121), *இன் எனும் வடிவத்திலும் அமையும்(**த.உ.தொல்.***119) *என்கிறார் தொல்காப்பியர்.*

*காட்டு: பத்து + அகல் > பத்து +இன் + அகல் > பதின் அகல் > பதிற்றகல்*

*இதன் இருவகைப் பண்பு கருதிய நன்னூலார் இன்னின் வேறாகிய சாரியை எனக்கொண்டு இற்றுச் சாரியை எனத் தனியே குறித்தார்.*

*அதே போன்று புணர்ச்சியில் இன் தன் முதலாகிய இகரம் நீங்கி னகரம் மட்டும் நிலைப்பதுண்டு; முழுவடிவமும் நிலைப்பதுண்டு என்கிறார் தொல்காப்பியர்(**த.உ.தொல்.***120).

*காட்டு: ஆ + இன் + கோடு > ஆன்கோடு ; ஆவின்கோடு*

*இந்த னகரத்தையும் நன்னூலார் இன்னின் வேறான சாரியை என விதி வகுத்துள்ளார். எனவே, இவை தொல்காப்பிய அடியொற்றிய சாரியைகளே ஆகும் என்பது தெளிவு.*

***வேற்றுமை உருபுகள்***

*உருபு புணர்ச்சி வரக்கூடிய இடங்கள் 40 என்று நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். எட்டுவேற்றுமை உருபுகள்(மூவிடம் குறித்த) ஐம்பாலுடனும் உறழ நாற்பது உருபுகள் என்று கருதுவதை,*

*'ஒருவன் ஒருத்தி பலர்ஒன்று பலவென*

*வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்கு*

*உருபு உறழ்தர நாற்பதாம் உருபே'* (நன். 240)

*என்ற நூற்பாவால் அறியலாம். இது வீரசோழியத்தின் கருத்தைத் தமிழ்மரபுக்குரிய நிலையில் திருத்திக் கூறியது எனலாம்.*

*'ஒருவன் ஒருத்தி பலர்ஒன்றொடு பலவும்சிறப்பின்*

*உருபுகண் மூன்றும் உடன்வைத்துப் பின்னெட்டு வேற்றுமையும்*

*மருவ நிறுவி உறழ்தரஆம் காரக பதங்கள்*

*உருவு மலியும் அறுபத்து நான்குள ஒண்டொடியே'* (வீர. 31)

*எனும் காரிகையில் ஐம்பால் மூவிடத்துடன், ஒருவனைக் கருதிய உயர்திணைப் பன்மையும், ஒருத்தியைக் கருதிய உயர்திணைப் பன்மையும் ஒன்றனைக் கருதி சிறப்பித்ததும் என மூன்றையும் இணைத்து வேற்றுமை ஏற்கும் பெயர் எட்டு என்று வீரசோழியம் கொண்டது. அவற்றுடன் எட்டு வேற்றுமைகள் உறழ அறுபத்து நான்கு வேற்றுமை வடிவங்கள் தோன்றும் என்கிறது. வீரசோழியம் புதியதாக இணைத்த மூன்று பெயர்களை நன்னூல் நீக்கியதுடன் வேற்றுமைப்பெயர் கூறாது வேற்றுமை உருபுகள் சேர உருபுகளின் நிலை நாற்பது என்கிறது.*

*இருப்பினும், தொல்காப்பியர், வேற்றுமை உருபுகள் எட்டு என்றும்(**த.உ.தொல்.**சொல்.547), பால் ஐந்து(**த.உ.தொல்.**சொல்.646) என்றும் குறிப்பிட்டுள்ளார். நன்னூலார், எட்டு வேற்றுமை உருபுகள் ஐம்பாலுடன் உறழ நாற்பது தோன்றும் என்று தொகுத்துக் கூறியுள்ளார். எனவே, இது தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் விதியாகும்.*

*ஆ, மா, கோ*

*'ஆ, மா, கோனவ் அணையவும் பெறுமே'* (நன்.248)

*பசுவை உணர்த்தும் ஆ என்பதும், விலங்கை உணர்த்தும் மா என்பதும் அரசனை உணர்த்தும் கோ என்பதும் உருபுகள் புணரும்போது 'ன்' என்ற சாரியை பொருந்தவும் பெறும். பெறாதிருத்தலும் உண்டு என்பது நன்னூலார் கருத்து. காட்டு:*

*ஆ+ஐ> ஆ+ன்+ஐ > ஆனை*

*ஆ+ஐ> ஆ+வ்+ஐ > ஆவை (உடம்படுமெய் தோன்றியது)*

*மா+ஐ> மா+ன்+ஐ > மானை*

*மா+ஐ> மா+வ்+ஐ > மாவை (உடம்படுமெய் தோன்றியது)*

*கோ+ஐ> கோ+ன்+ஐ > கோனை*

கோ+ஐ> கோ+வ்+ஐ > கோவை (உடம்படுமெய் தோன்றியது)

தொல்காப்பியர், இன் சாரியையது இகரம் ஆ எனும் சொல்லின் முன் கெடுதலும் உண்டு. கெடாது நிற்றலும் உண்டு என்று கூறியுள்ளார்(**த.உ.தொல்.**120). இகரம்திரிந்து, ன் மட்டும் நிற்கும் நிலையை நன்னூலார் சுட்டுகிறார். எனவே, இது தொல்காப்பிய அடியொற்றிய நன்னூலார் கருத்து என்பது தெளிவு. மேலும், ஒகார ஈற்றுச்சொல் ஒன் சாரியை பெறும் என்பது தொல்காப்பியர் கருத்து(**த.உ.தொல்.**294). ஒகரம்திரிந்து, ன் மட்டும் நிற்கும் நிலையை நன்னூலார் சுட்டுகிறார். எனவே, இதுவும் தொல்காப்பிய அடியொற்றிய நன்னூலார் கருத்து என்பது தெளிவு.

சுட்டு நீளின் யகரம்

'.................................தூக்கில் சுட்டு

நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே' (நன். 163)

செய்யுளில் சுட்டு நீளும் என்ற தொல்காப்பிய விதியை(**த.உ.தொல்.**208) மறுபதிவு செய்த நன்னூலார், 'நீளின் யகரம் தோன்றுதல் நெறியே' என்று நூற்பா அமைத்துள்ளார். நூற்பா என்ற அமைப்பில் இது புதிய செய்தி என்றாலும் இவ்விலக்கணம் தொல்காப்பியத்தில், பாயிரத்திலும் பல இயல்நூற்பாக்களில் காணக்கிடக்கின்றன. அவற்றுள் சில வருமாறு,

ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்(பாயிரம்)

ஆயிரு முதலின்(பாயிரம்)

ஆயீரியல(த.உ.தொல்17,103,107)

ஆயியல்(**த.உ.தொல்.**207)

தொல்காப்பியம் உடம்படுமெய் குறித்துச் சுட்டிய நூற்பா(**த.உ.தொல்.**140) உரையில் இளம்பூரணர் விகாரப்பட்ட புணர்மொழிகளுக்கும் உடம்படுமெய் வரும் என்று குறிப்பிட்டு 'மரவடி' 'ஆயிருதிணை' என்னும் சான்றுகளைக் காட்டியுள்ளார். இவற்றுள் ஆயிருதிணை என்னும் தொடரில்,

அ + இருதிணை > ஆ + இருதிணை > ஆ + ய் + இருதிணை > ஆயிருதிணை

என்ற நிலையில் ஆகாரத்தின் முன் யகரம் உடம்படுமெய்யாக வந்துள்ளது. சுட்டு எழுத்தான அகரம், ஆகாரமாக விகாரப்பட்டு நீண்டதால் அங்குத் தோன்றவேண்டிய வகரம் தோன்றாமல் யகரம் மிக்கது. இதனைச் செய்யுள் வழக்கு என இலக்கணங்கள் குறிப்பிடும். தொல்காப்பியத்தின் 'நீடவருதல் செய்யுளுள் உரித்தே'(**த.உ.தொல்.**208) என்ற நூற்பாவும் உடம்படுமெய் குறித்த இளம்பூரணர் உரையும் நன்னூல் மேற்கண்ட நூற்பா அமைத்திட காரணமானது. எனவே, நூற்பா என்ற வடிவில் மட்டுமே இது புதியது. கூறப்பட்ட விதியானது உடம்பொடு புணர்த்தல் எனும் உத்திவழி தொல்காப்பியம் வகுத்தவிதியே ஆகும். எனவே, இது தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் விதியாகும்.

இம்மரபினுக்கு வீரசோழியம் விதிவகுக்கவில்லை. நேமிநாதம் இயல்புறனடையாக அமைந்த நூற்பாவில்(நேமி.24&உரை), விகாரப்பட்ட புணர்மொழியில் உடம்படுமெய் தோன்றுதலைச் சுட்டினாலும் வகரமும் யகரமும் தம்மில் ஒன்றாய் மயங்கவும் பெறும் என்றே எடுத்தோதுகிறது.

ஆ முன் பகர ஈ

'ஆமுன் பகரஈ அனைத்தும்வரக் குறுகும்

*மேலன அல்வழி இயல்பா கும்மே'* (நன்.177)

*ஆ எனும் சொல்முன் எச்சொல் எவ்வெழுத்து வரினும் பீ என்பது பி எனக் குறுகும். அல்வழிக்கண் இயல்பாய் மட்டுமே வரும் என்பது நன்னூலார் கருத்து. காட்டு:*

*ஆ+பீ > ஆப்பி*

*ஆப்பீ + கரிது > ஆப்பி கரிது*

*தொல்காப்பியம்(த.உ.தொல்.233), ஆன் என்ற னகரச் சாரியை பெற்ற சொல்முன் வரும் பகர ஈகாரமாகிய இடக்கர்ச்சொல், தான் தன்ஒற்று மிகுந்து, அதிலுள்ள ஈகாரம் இகரமாதலுமுண்டு, குறுகாது நிற்றலுமுண்டு என்று கூறுகிறது. காட்டு: ஆன் + பீ > ஆப்பி; ஆப்பீ. தொல்காப்பியர் னகர ஒற்றுக்கெட்டு, பகர ஒற்றுத்தோன்றும் என்று கூற, தொல்காப்பியரின் இக்கருத்தை அடியொற்றிய நன்னூலார், தொல்காப்பியர் கூறும் திரிந்த வடிவத்தையே முதன்மை வடிவமாக விதி செய்து 'ஆ முன் பீ வரின்' என்று கூறுகிறார். எனவே, இது தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் விதியாகும்.*

***குற்றியலுகரம்***

*'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்'* (நன்.164)

*குற்றியலுகரம் நிலைமொழி ஈற்றில் நின்று, எதிரே உயிரெழுத்து வரின் அந்த உகரம் ஓடிவிடும் என்று நன்னூலார் விதி வகுத்துள்ளார். இவ்விதி தொல்காப்பிய(த.உ.தொல்.104,தொல்.105) அடியொற்றிய நன்னூல் விதி என்பதற்கான சான்றை, இயல் 3இல் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.*

*'யவ்வரின் இய்யாம் முற்றும்மற்று ஒரோவழி'* (நன்.164)

*குற்றுகர இறுதியுடன் யகரம் வருமொழி முதலாய்ப் புணரின் குற்றியல் உகரம் இகரமாகத் திரியும் என்பது நன்னூல் கூறும் செய்தி. காட்டு:*

*நாடு+யாது> நாடியாது*

*குற்றுகரம் முழுவதும்கெட்டு, இகரம் மிகும் என்பது தொல்காப்பியம் கூறும் செய்தி(த.உ.தொல்.410). தொல்காப்பியர் கெட்டு மிகும் என்று குறித்த இவ்விதியை நன்னூலார் திரியும் என்று குறிப்பிடுகிறார். எனவே, இது தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் விதியாகும்.*

***முற்றியலுகரம்***

*'யவ்வரின் இய்யாம் முற்றும்மற்று ஒரோவழி'* (நன்.164)

*'முற்றும்மற்று ஒரோவழி' எனும் வரியின் வழி, முற்றியலுகரமும் ஒருசில இடங்களில் உகரம் கெட்டு வரும் என்று நன்னூலார் கருத்தை விளக்கியுள்ளது. இதுவும் தொல்காப்பிய அடியொற்றிய நன்னூலார் விதி என்பதற்கான சான்றை, இயல் 3இல் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.*

*நும், தம், எம், நம்*

*'நும்தம்*

*எம்நம் ஈறாம் மவ், வரு ஞநவே'* (நன். 221)

வாகை பதிப்பகம்

நும், தம், எம், நம் என்பன உருபேற்க வரும் விகாரம் பெற்ற சொற்களின் ஈற்றிலுள்ள மகரம், எதிரே வரும் ஞகர, நகர மெய்களுக்கு ஏற்ப மெல்லினமாகத் திரியும். அதாவது நிலைமொழி ஈற்று மகரம் ஞகர நகரமாகத் திரியும் என்று நன்னூல் குறிப்பிடுகிறது. காட்டு:

நும் + ஞாண் > நுஞ்ஞாண் நும் + நலம் > நுந்நலம்

தம் + ஞாலம் > தஞ்ஞாலம் தம் + நலம் > தந்நலம்

எம் + ஞாலம் > எஞ்ஞாலம் எம் + நூல் > எந்நூல்

நம் + ஞாலம் > நஞ்ஞாலம் நம் + நூல் > நந்நூல்

மூவிடப்பெயர்களின் பன்மை வடிவங்கள் வேற்றுமையில் தம், நம், எம், நும் என அமையும்(த.உ.தொல்.188) என்பது தொல்காப்பிய விதி. இளம்பூரணர்,

“ஆவயி னான என்றதனான், படர்க்கைப்பெயர்க்கும் முன்னிலைப் பெயர்க்கும் ஞகரமும் நகரமும் வந்துழி அவை மிகுதலும், தொடக்கம் குறுகும் பெயர்க்கும் அஞ் ஞகரமும் நகரமும் வந்துழி மகரங்கெட்டு அவை மிகுதலுங் கொள்க.” (இளம்.உ.தொல். 321)

என்கின்றார். எனவே, தொல்காப்பியர், மகரம் கெட்டு, வருமொழியில் நின்ற மெய் மிகும் எனக்கூற, நன்னூலார், நிலைமொழி மகரம் திரியும் என்கின்றார். எனவே, புணரும் முறையில் நன்னூலாருக்கும் தொல்காப்பியருக்கும் சிறு கருத்து வேற்றுமை காணப்படுகிறது. இருப்பினும், இது தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் விதியாகும்.

அகம் முன் செவி, கை

‘அகம்முனர்ச் செவிகை வரின்இடை யனகெடும்’ (நன். 222)

அகம் எனும் சொல் முன் செவி, கை எனும் சொற்கள் வந்தால், நிலைமொழியின் நடுவில் உள்ள ‘க’ என்ற உயிர்மெய் கெடும். நிலைமொழி ஈறு வல்லினத்துக்கு இனமாகத் திரியும் என்பது நன்னூல் விதி. காட்டு:

அகம் + செவி > அம் + செவி > அஞ்செவி

அகம் + கை > அம் + கை > அங்கை

தொல்காப்பியர்(த.உ.தொல்.315), அகம் என்ற சொல்முன் கை வரின், அகரம் மட்டும் நிற்க, ககர உயிர்மெய்யும் மகர மெய்யும் கெட்டும் கெடாமலும் நின்று முடியும்; பின் மெல்லெழுத்து மிக்கு முடியும் என்கின்றார். காட்டு:

வாகை பதிப்பகம்

அகம் + கை > அங்கை/ அகங்கை

எனவே, தொல்காப்பியர் கெடாதும் புணரும் என்றுரைத்ததை நன்னூலார் கூறவில்லை. தொல்காப்பியர் அகரம் மட்டும் நின்று பிறகெடும்; பின்மென்மை மிகும் என்று கூற, நன்னூலார், இடைநின்ற ககரம் கெட்டு, ஈறு மெல்லினமாய்த் திரியும் என்று கூறுகிறார். எனவே, புணரும் முறையில் நன்னூலாருக்கும் தொல்காப்பியருக்கும் சிறு கருத்து வேற்றுமை காணப்படுகிறது. இருப்பினும், இது தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் விதியாகும் என்பது தெளிவு. நேமிநாதம்(நேமி.23), ‘அகம் எனும் சொல்லின் இடையில் நின்ற உயிர்மெய் அழியும்’ என்று கூறியுள்ளமையும் கருதத்தக்கது. மேலும், இளம்பூரணர்,

“‘அஞ்செவி நிறைய மந்திரம் கூறி’ என்பது அகம் என்னும் நிலைமொழி செவி என்னும் வருமொழியொடு வேறுபட முடிந்தது.” (இளம். உ.தொல். 483 )

என்றுரைத்துள்ளார். இதன்வழி, நன்னூலார், செவி எனும் சொல்லையும் இணைத்துக்கொண்டுள்ளார் எனலாம்.

நீர் வேற்றுமையில் நும் ஆதல்

'தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்

நீநீர் என்எம் நின்நும் ஆம்பிற

குவ்வின் அவ்வரும் நான்குஆறு இரட்டல' (நன். 247)

நீர் என்பது வேற்றுமையில் நும் என மாறும் என்பது நன்னூல் விதி. தொல்காப்பியம், நீஇர் என்ற பெயரின் வேற்றுமை வடிவம் நும் எனக்கூறாது நும்மெனும் வடிவத்திலிருந்து நீஇர் எனும் வடிவம் தோன்றியதாகக் குறிப்பிடும்(த.உ.தொல்.326). மேலும், தொல்காப்பியம், 'நீஇர்' என்று அளபெடைவடிவம் குறிக்க நன்னூல் 'நீர்' என்று அளபெடை பெறா நெடில் வடிவத்தையே குறிப்பிடும். நீஇர் எனும் வடிவம் அல்வழியில் இயல்பாய் முடியும் என்றும் தொல்காப்பியம் குறிப்பிடும். நன்னூல், நீர் என்பதை அடிப்படை வடிவமாகக் கொண்டு நீர் என்பது நும் என ஆவதாகக் குறிப்பிடும். அடிப்படை வடிவத்தை வரையறுத்ததில் தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும் கருத்து வேற்றுமை உள்ளமை தெளிவு. இருப்பினும் இவ்விதி தொல்காப்பிய அடியொற்றி நன்னூலார் வகுத்த விதி என்பதை மறுப்பதற்கில்லை. இச்சொல்லின் வடிவம் குறித்து, அடிகளாசிரியர் ப.ஆ,

"இந்த நீஇர் எனும் சொல்லின் பழைய வடிவத்தை மறந்த பிற்காலத்தார் இகரத்தை நீக்கி 'நீ' என்றும் யகர உடம்படுமெய் கொடுத்து நீயிர் என்றும் வகர உடம்படுமெய் கொடுத்து 'நீவிர்' என்றும் வழங்குவாராயினர். நன்னூலார் முன்னிலை ஐந்து என்று கூறி அவை எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்று வரும் என்று சொல்லி நீர் என்பது மட்டும் வேற்றுமையில் நும்மாகும் என்றனர்." (அடி.ப.ஆ.உ.தொல்.எழு.327)

என்பதும் எண்ணத்தக்கது.

மூன்றாம் ஆறாம் வேற்றுமை உருபு, வினைத்தொகை

'மூன்று, ஆறு உருபு, எண், வினைத்தொகை சுட்டுஈறு

ஆகும் உகரம் முன்னர் இயல்பாம்' (நன்.179)

இந்நூற்பாவில், மூன்றாம் வேற்றுமை உருபு(ஒடு), வினைத்தொகை தவிர பிற அனைத்தும்(ஆறாம் வேற்றுமை உருபு அது, எண், சுட்டு ஈறு ஆகும் உகரம் ஆகியவை) முன்னர் வல்லினம் வரின் வல்லொற்று மிகாது என்று நன்னூலார் கூறுவது, தொல்காப்பிய அடியொற்றிய விதியாகும். காட்டு:

முருகனது + தோட்டம் > முருகன் + அது + தோட்டம் > முருகனது தோட்டம்

ஒரு + கை > ஒரு கை

அது + சிறந்தது > அது சிறந்தது

தொல்காப்பியம்(த.உ.257), சுட்டெழுத்தை முதலாகவுடைய உகர ஈற்றுப்பெயர், வல்லொற்று மிகாது இயல்பாகப் புணரும் என்கிறது. மேலும், த.உ.தொல். 478இல், ஒன்று என்பது ஒரு என திரியும்போது நின்ற இயல்பிலேயே புணரும் என்ற விதியுள்ளது. எனவே, இவை தொல்காப்பிய அடியொற்றிய விதிகளாகும்.

***அது முன் அன்று***

*'அதுமுன் வரும்அன்று ஆன்றாம் தூக்கின்'* (நன்.180)

*அது முன் வரும் அன்று, ஆன்று என முதல் நீளும் என்பது நன்னூலார் கருத்து.*

*அது + அன்று > அது + ஆன்று > அதான்று*

*ஆயினும் தொல்காப்பியம்(த.உ.தொல்.258), சுட்டெழுத்தை முதலாகவுடைய பெயரின் உகர ஈறு அன்று வருமொழியாய் வரின், 'ஆ' ஆகும் என்கிறது. காட்டு:*

*அது + அன்று > அத்+உ+அன்று> அத்+ஆ+அன்று> அதான்று*

*தொல்காப்பியர் நிலைமொழி உகரம் ஆகாரமாகும் என்றுரைக்க நன்னூலார் வருமொழி அகரம் 'ஆ' ஆகும் என்றார். எனவே, சுட்டு நீளுதல் என்ற தொல்காப்பிய விதியை அடியொற்றி நன்னூலார் வகுத்த இவ்விதியில் வருமொழி சுட்டு நீளுவதாகக் கூறுவது மட்டும் வீரசோழியர்(வீர.26) கருத்தைப் பின்பற்றிய செய்தி எனத்தெரிகிறது.*

***பனை முன் திரள்***

*'பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்*

*ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்*

*அட்டுறின் ஐ கெட்டுஅந் நீள்வுமாம் வேற்றுமை'* (நன். 203)

*பனை எனும் மரப்பெயர் முன் கொடி எனும் சொல் வரின் ஒற்று மிகும், க,ச,த,ப வல்லெழுத்துகள் வரின் நிலைமொழி இறுதி ஐ கெட்டு, அம் சாரியை பெறும், திரள் எனும் சொல் வரின் இருவழியாகவும் உறழ்ந்து வரும், அட்டு வரின் ஐ கெட்டு, வருமொழி அ - ஆ என நீளும் என்பது நன்னூலார் கருத்து.*

*பனை + கொடி > பனைக்கொடி*

*பனை + காய் > பனை + அம் + காய் > பனங்காய்*

*பனை + திரள் > பனை + அம் + திரள் > பனந்திரள்; பனைத்திரள்*

*பனை + அட்டு > பன் + ஆட்டு > பனாட்டு*

*இவை யாவும் தொல்காப்பிய அடியொற்றிய நன்னூல் விதி என்றாலும், நுணுகி ஆராய்ந்தால் வழக்குச்சார்ந்து சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொல்காப்பியர், பனை முன் க,ச,த,ப வரின் ஐ கெட்டு, அம் சாரியை வந்து புணரும் என்கின்றார்(த.உ.தொல்.283). இக்கருத்தை ஏற்றுக்கொண்ட நன்னூலார், பனை முன் திரள் எனும் சொல் வரின், இருவழியாகவும் உறழ்ந்து வரும் என்கின்றார். அதாவது, அம் சாரியை பெறுதலும் உண்டு வல்லினம் மிகுதலும் உண்டு என்கின்றார். வல்லினம் மிகுதல் குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. நன்னூலார் காலத்தில் பனந்திரள் எனும் சொல், பனைத்திரள் என்றும் வழங்கியிருத்தல் கூடும்.*

*மேலும், பனை முன் அட்டு எனும் சொல் வரின், நிலைமொழி ஈற்று ஐகாரம் கெட்டு ஆகாரம் புணரும் என்று தொல்காப்பியம்(த.உ.284) கூற(பனை+அட்டு>பனாஅட்டு), வருமொழி முதலில் உள்ள அகரம் ஆகாரமாக நீளும் என்று நன்னூல் கூறுகிறது(பனாட்டு). நன்னூலார் காலவழக்கில், 'பனாஅட்டு' என்று*

வழங்கப்பட்ட சொல் ‘பனாட்டு’ என்று அகரம் சுருங்கி வழங்கி இருத்தலே இதற்குக் காரணமாக இருத்தல் வேண்டும். எனவே, இவை அனைத்தும் தொல்காப்பிய அடியொற்றிய விதிகள் என்பது தெளிவு.

**ஊன்**

‘குயின்ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே’ (நன். 216)

ஊன் எனும் இறைச்சியைக் குறிக்கும் சொல் வேற்றுமையிலும் அல்வழியிலும் இயல்பாகும் என்பது நன்னூலார் கூறும் செய்தி. காட்டு:

ஊன் + கொடுமை > ஊன் கொடுமை

ஊன் + தடித்தது > ஊன் தடித்தது

ஊ என்னும் தசையை உணர்த்தும் பெயர்ச்சொல் ஆ என்னும் பெயரோடு ஒத்து, னகரச் சாரியை பெறும்(த.உ.தொல். 269) என்பது தொல்காப்பிய விதி. ஆனால், நன்னூலார் காலவழக்கில், னகரம் புணர்ச்சிக்குரிய வடிவ இணைப்பாகக் கருதப்பெறாமல் ‘ஊன்’ என்பதே வடிவமாக இருந்திருத்தல் வேண்டும். எனவேதான், நன்னூல் ‘ஊன்’ எனும் சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளது எனக்கொள்ளலாம். எனவே, இவ்விதி, தொல்காப்பிய அடியொற்றி, புதிய வடிவம் கண்ட நன்னூல் விதியாகும்.

**அட்டவணை 1: நன்னூலில் புதிய புணர்ச்சி விதிகள்**

| எண் | நன்னூலில் புதிய புணர்ச்சிவிதிகள் | காட்டு | நூற்பா எண் |
|---|---|---|---|
| 1 | எகர வினா | யாது – எது<br>யாவர்- எவர் | 163 |
| 2 | அளவுப்பெயர் உரி முன் ஏற்ற சொல் வரின் யகர மெய் தோன்றும். | உரி+பயறு= உரியபயறு | 174 |
| 3 | நொ,து முன் ஞ,ந,ம,ய,வ | நொ+ஞெள்ளா=நொஞ்ஞெள்ளா | 158 |
| 4 | குற்றுகர ஈற்று மரப்பெயர் | தெங்கு+காய்=தேங்காய் | 187 |
| 5 | பரண், கவண் வேற்றுமையில் வல்லினம் வரின் இயல்பாகும். | பரண்+கால்=பரண் கால்<br>கவண்+கொம்பு=கவண் கொம்பு | 211 |
| 6 | எகின் பறவைப்பெயர் வேற்றுமையில் இயல்பாகும். | எகின்+கால்=எகின் கால் | 215 |

**அட்டவணை 2: தொல்காப்பியத்தை அடியொற்றிய நன்னூல் புணர்ச்சி விதிகள்**

| எண் | நன்னூல் விதிகள் | காட்டு | நன்.நூற் | தொல்.நூற்பா |
|---|---|---|---|---|
| 1 | சாரியைப்புணர்ச்சி<br>அகரச்சாரியை<br>குகரச்சாரியை<br>அற்றுச்சாரியை<br>இற்றுச்சாரியை<br>னகரச்சாரியை | தமிழ்+சாதி=தமிழச்சாதி<br>அவ்+ஐ=அவற்றை<br>பத்து+அகல்=பதிற்றகல்<br>ஆன்+கோடு=ஆன்கோடு | 225<br>244<br>244<br>244<br>244 | 128<br>126<br>122,174,175,<br>177,183 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வேற்றுமை உருபுகள் | எட்டு வேற்றுமை உருபுகள் | 240 | 547,646 |
| 3 | ஆ, மா, கோ னகரச்சாரியைப்பெறும், பெறாதிருத்தலும் உண்டு | ஆ+ஐ=ஆனை<br>மா+ஐ=மானை<br>கோ+ஐ=கோனை | 248 | 120,294 |
| 4 | சுட்டு நீளின் யகரம் | ஆ+இடை = ஆயிடை | 163 | 208 (உடம்பொடு புணர்த்தல் விதி) |
| 5 | ஆ முன் பகர ஈ | ஆ+பீ=ஆப்பி | 177 | 233 |
| 6 | குற்றியலுகரம் | நாடு+யாது=நாடியாது | 164 | 410 |
| 7 | முற்றியலுகரம் | | 164 | உடம்பொடு புணர்த்தல் விதி |
| 8 | நும், தம், எம், நம் | நும்+ஞாண்=நுஞ்ஞாண் | 221 | 188, 321இளம்.உரை |
| 9 | அகம் முன் செவி, கை | அகம்+செவி=அஞ்செவி<br>அகம்+கை=அங்கை | 222 | 315 |
| 10 | நீர் வேற்றுமையில் நும் ஆதல் | நீ – நும் | 247 | 326 |
| 11 | மூன்றாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, வினைத்தொகை | முருகனது+தோட்டம்= முருகனது தோட்டம் | 179 | 257, 478 |
| 12 | அது முன் அன்று | அது+அன்று=அதான்று | 180 | 258 |
| 13 | பனை முன் திரள் | பனை + திரள்=பனைத்திரள் | 203 | 283,284 |
| 14 | ஊன் | ஊன் +கொடுமை=ஊன் கொடுமை | 216 | 269 |

***முடிவுரை***

காலந்தோறும் மொழி வளர்ச்சி பெற்றாலும், புதிய இலக்கணநூல்கள் தோன்றினாலும், புணர்ச்சி விதிகள் பெரும்பாலும் தொல்காப்பியத்தை அடியொற்றியே சமைக்கப்பட்டுள்ளன என்ற உண்மை ஆராய்ச்சியின் வழி நிறுவப்பட்டுள்ளது. இக்கட்டுரையில், நன்னூலில் புதிய புணர்ச்சி விதிகள், தொல்காப்பியத்தை அடியொற்றிய நன்னூல் புணர்ச்சி விதிகள், ஆகியவை ஆராயப்பட்டுள்ளன. நன்னூலார் கூறும் ஏறக்குறைய 119 புணர்ச்சி விதிகளில் 6 விதிகள் (5%) புதிய விதிகள். 14 விதிகள்(12.6%) தொல்காப்பியத்தை அடியொற்றிய நன்னூல் விதிகளாகும். இக்கட்டுரையில் கண்டறியப்பட்ட செய்திகளின் தொகுப்புக் கீழே அட்டவணைகளில் (1, 2) காட்டப்பட்டுள்ளன. இதன் வழி, நன்னூலில் ஏறக்குறைய 5% மட்டுமே புதிய புணர்ச்சி விதிகள் சமைக்கப்பட்டுள்ளன. பல விதிகள் தொல்காப்பியத்தை அடியொற்றியே சமைக்கப்பட்டுள்ளன என்ற தகவல் கண்டறியப்பட்டுள்ளன.

வாகை பதிப்பகம்

***REFERENCES***


Alagesan, S. (2007). *Ilakkanap Paarvaikalum Pathivugalum*, Segar Publication, Chennai.

Aravinthan, M.,V. (2013). *UraiyaasiriyarkaL*. Manivaasagar Publication, Chennai.

Arunasalam, M. (1972). *Tamil Ilakkiya varalaaru(11th century),* Ganthi Vithyaalayam Publication, Chennai.

Ilampuranar, (1964). *Tholkaappiya Eluthathigaaram*. Kazaga Veliyiidu Thirunelveli Thenninthiya Saiva Sittantha Nudpathippu Kazagam, Chennai.

Maniccam, S., B. (1989). *Tholkaappiyak Kadal*. Manivasagar Publication. Chennai.

Rasaram, S. (2010). *Ilakkanaviyal Mikkoodpaadum KodpaadukaLum,* Kalacchuvadu Publication, Chennai.

Sangara Namacchivayar, (1968). *Nannul – Sanggara Namacchivaya Viruththiyurai,* Saiva Sitthanda Nudpathippu Kazakam, Chennai.

Seeni Naina Mohamed, S.(2010). *Tamil Chodpunarchik KodpaadukaLum Puthiya Vithigalum*, Semmoli Maanaaddin Malaysiakkadduraikal, Maaysia Tamil Writers Association Publication.

Shanmugam, S.,V. (2004). *IlakkaNa Aivu*, Meyyappan Publication, Chithambaram.

Sivalinganar. A. (1983). Tholkaappiya Eluthathigaram(Uraivalam Punariyal). Ulaga Tamil Arachi Niruvanam, Chennai.

Supramaniyan, I.(1989). *Tholkaappiya Eluthu Padala Peerurai*, Tamil Valarchi Padalam, Chennai.

Vellaivaaranar (1998). *Tholkaappiyam-Nannul(ezuthathigaram),* Annamalai University, Annamalai Nagar.

Veluppillai, A. (2002). *Tamil Varalaarru Ilakanam*, Kumaran Book House, Kolumbu-Chennai.


**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License